28th November 1970]

சிப்பந்திகள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்காமல் மற்றவர்களுக்குக் கொடுப்பது நியாயமில்லை என்பதால், அவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Irrespective of the scale of pay last drawn by them under this proposal even the retired Municipal employees whose minimum scale of pay last drawn was Rs. 90/- or below will get pension.

*House sites and Poramboke Lands*

*15. *Q.*—THIRU M. AYASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the order of priority in the matter of allocation of House sites and Poramboke lands ; and

(*b*) the priority given to the barber and washerman communities in this matter ?

**வீட்டு மனைகள், புறம்போக்கு நிலங்கள்**

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வீட்டு மனைகள், புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கீடு விஷயத்தில் யார் யாருக்கு முன்னுரிமை (Priority) அளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இவ்விஷயத்தில் மருத்துவ சமூகத்தினர், சலவையாளர்கள் ஆகியவர்கள் எந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) அரசு புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைகளுக்காக ஒப்படை செய்வதில் கீழ்க்கண்ட வாறு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது :

(1) ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போதே உயிரிழந்தவர்கள், அங்க ஊனமானவர்களின் குடும்பத்தினர்.

(2) வீடில்லாத ஏழை ஹரிஜனங்கள்.

(3) ராணுவத்தில் பணி புரிந்து கொண்டிருப்பவர்கள்.

(4) மாஜி ராணுவத்தினர்.

(5) இலங்கை, பர்மிய அகதிகள்.

(6) தங்கக்கட்டுப்பாடு உத்தரவினால் வேலையிழந்த பொற் கொல்லர்கள்.

(7) இதர வீடில்லாத ஏழை மக்கள்.

(இ) இவர்கள் வீடில்லாத ஏழைகளாகக் கருதப்படுவர்.

[27th November 1970

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, மருத்துவ சமூகத்தினர், சலவைத் தொழிலாளர்கள் அதில் எந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் பதில் சொல்லும்போது (இ) என்ற பிரிவிற்குச் சொன்னேன். ''அவர்கள் வீடில்லாத ஏழைகளாகக் கருதப்படுவர்'' என்று.

திரு. எம். அய்யாசாமி : வீடில்லாத ஏழைகளாக உள்ள மருத்துவ சமூகத்தினருக்கு அந்த வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் அரசாங்கம் கவனம் செலுத்தி, எல்லா இடங்களிலும் தாராளமாக வீட்டு மனைகள் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமப் பகுதியில் மைனாரிடியாக இருக்கிற இந்த சமூகத்தினர் வீடில்லாமல் நிலமில்லாமல் இருப்பதால், அவர்களுக்கு முன்னுரிமை தந்து மனைகளை வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : முன்னுரிமைப் பட்டியலில் உள்ளவர்கள் பெயர்களைச் சொன்னேன். பொதுவாக மருத்துவ சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிச்சயம் ஆங்காங்குள்ள அதிகாரிகள் நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அளிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சமுதாயத்தில் பின் தங்கியவர்களாக இருப்பவர்கள் எந்த இடத்தில் பட்டியலில் வருகிறார்கள் என்று பார்க்காமல், அவர்களுக்கு நிச்சயம் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அரசாங்கம் செயலாற்றும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஏதேனும் புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படிக் கொடுக்கப்பட்டிருக்குமானால், அவர்களுடைய பெயர்களை வெளியிடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்கலாம். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்றாலே, அவர்கள் பாவம் செய்தவர்கள் என்ற முடிவுக்கு வரக் கூடாது. அவர்களும் ஏழைகளாக இருக்கலாம் ; அரிஜனங்களாக இருக்கலாம். சட்டப்படி அவர்களும் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கலாம். அப்படியிருந்தாலும், ஒரு பொறுப்பில் இருக்கும்போது நிலம் வாங்கி சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்படி யாராவது முன்னாள் உறுப்பினர்கள், இப்போது இருக்கிறவர்கள் வாங்கியிருப்பார்களானால், அவற்றை அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

28th November 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இந்தக் கேள்வியை எந்த நோக்கத்தோடு கேட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று கூறினார்களே தவிர, தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்கள் என்ற நோக்கம் அதில் இருக்கிறது. இந்த மன்றத்திலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களும் வாங்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் வெளியிட காலம் வரும். அப்போது வெளியிடப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பத்திரிகையில் பார்த்தபோது எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வாங்கியிருக்கிறார்கள் என்றுதான் இருந்தது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வாங்கியிருந்தாலும் அவர்களுடைய பெயர் அறிவிக்கப்படுமா என்று கேட்டேனே தவிர, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்த நோக்கத்தில் கேட்டிருந்தாலும், எனக்குச் சாதகமான ஒரு கேள்வியைக் கேட்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன். நானும் உரிய காலத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தேன். பல கட்சிகளைச் சேர்ந்த மாநில எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள், எம்.பி.க்கள் வாங்கியிருக்கிறார்கள். அதில் எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், வாங்கியிருப்பவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவர்களும் அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன். மற்றக் கட்சியினை சேர்ந்தவர்கள் வாங்கியிருந்தால், கொடுத்துவிடுவார்கள் என்று நம்புகிறேன். அதில் எம்.எல்.சி.க்களும் இருக்கிறார்கள். 20 ஏக்கர், பத்து ஏக்கர் என்று வாங்கியிருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கும் விஷயத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதைப் பற்றிப் பேசும் போது, திடீரென்று முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களும் கூட நிலம் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி யாராவது நிலம் இல்லை என்று சொல்லி நிலம் வாங்கியவர்கள் பட்டியலில் காங்கிரஸ் அங்கத்தினர் வாங்கியிருந்தால் அதைப் பகிரங்கமாக எப்போதோ அல்ல, இப்போதே வெளியிடும் படியாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெரிய பட்டியலை வெளியிட வேண்டியிருக்கிறது. இப்போது கைவசம் அந்தப் பட்டியல் இல்லை. இந்த அவையில் உள்ள உறுப்பினர் திரு. ராமன் நாயர் அவர்கள் தியாகி என்ற பெயரில் 10 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார்கள். தியாகி அல்லாத வகையில் அவருடைய மனைவி பெயருக்கு மீண்டும் 10 ஏக்கர் வாங்கியிருக்கிறார்கள். அது தியாகிகளுக்காகக் கொடுக்கப்பட்ட நிலம் அல்ல. தியாகி என்ற வகையில் 10 ஏக்கரும் தியாகி அல்லாத நிலையில் பத்து ஏக்கரும் வாங்கியிருக்கிறார்.

திரு. கே. ராஜாராம் : தியாகிகள் என்ற நிலையில் நிலம் வாங்கியவர்களை இதில் சேர்க்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. ராஜாராம் அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

புலவர் ஒ. அறிவுடை நம்பி : ஆசிரியர் சமூகத்திற்கு அரசு ஏதாவது நிலம் வழங்கி உதவுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : வீடு இல்லாத ஏழைகளாக இருந்தால், நிச்சயமாகப் பரிவோடு கவனிக்கும்.

திரு. ஆர். ராமன் நாயர் : தலைவர் அவர்களே, நான் பத்து ஏக்கர் ''பொலிடிகல் சஃபரர்'' என்ற முறையில் பூமி வாங்கிய தற்குப் பிறகு 10 ஏக்கர் பூமி வாங்கியதாக மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். எனக்கு ''தியாகிகள்'' என்ற முறையில் 20 வருடங்களுக்கு முன்பு பத்து ஏக்கர் பூமி தரப்பட்டது. அதை இந்தச் சபையில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான் ஒரு பொதுஜன ஊழியன் என்ற காரணத்தால், எனக்கு பூமி கொடுக்கவில்லை. அதை வாங்கியதி லிருந்து அந்த பூமி பிறரிடத்திலிருக்கிறதே தவிர, என்வசம் கிடைக்கவில்லை. அதைக் கூட வேறு சிலர் பெயருக்கு மாற்றுவ தற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். அந்தக் காலத்திலேயே ஏதாவது விலைக்கு அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்றேன். எனக்கு பூமி வைத்து ஆளக்கூடிய வசதியில்லாத காரணத்தால், அதற்காக ஏதாவது கொடுத்தால் போதும் என்று அந்தக் காலத்தில் முடிவு செய்தேன். சட்ட மன்றத்தில் என்னுடைய கணக்கைக் கேட்டபோதுகூட அதைக் குறித்திருக்கிறேன். பூமி பட்டா என் பெயரில் இருப்பதால், நான் வைத்திருப்பதாகக் காட்டப் படுகிறது. அந்த பூமி என் வசமில்லை என்பதை முதலமைச்சருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் பலர் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் ''என்க்ரோச்'' பண்ணிய காலத் தில் என் பெயரில் $4\frac{1}{2}$ ஏக்கர் பூமி ''என்க்ரோச்'' செய்தது வாஸ்தவம். அப்படிப் பத்து ஏக்கர் என்னிடமில்லை. ''என்க்ரோச் மெண்ட்'' இருந்தபோதே, பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் பட்டா போட்டபோது, அதில் என்னிடமும் வந்து கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்போது நான் எத்தனை ஏக்கர் பூமி வேண்டுமானாலும் ஐந்து ரூபாய் கொடுத்து வாங்கியிருக்க முடியும். பூமி வைத்து விவசாயம் செய்ய நேரம் இல்லாத காரணத்தால், அதை வாங்க விரும்ப வில்லை. என்க்ரோச்மெண்டில் கொடுத்த காரணத்தால், 15 வருஷத்திற்கு முன்னால் அதை வாங்கியது வாஸ்தவம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ராமன் நாயர் பெயரில் 10 ஏக்கர் நிலம் ''தியாகி'' என்ற அடிப்படையில் கொடுக்கப் பட்டது. அவர் மனைவி பெயரில் இருக்கிற பத்து ஏக்கர் நிலம் தியாகி நிலப் பட்டா அல்ல என்றுதான் சொன்னேன். அதன் நிலைமையை விளக்கி அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

28th November 1970]

திரு. ஆர். ராமன் நாயர் : பத்து ஏக்கர் என் பெயரில் இல்லை என்று தெரியப்படுத்துகிறேன். என் கைக்கு அது வரவில்லை. விவசாயம் செய்யவும் இல்லை. அது திரும்பக் கிடைக்கும் என்ற எண்ணமும் எனக்கில்லை. அதைவிட்டு விட்டேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பட்டா உங்கள் பெயரில் தானே இருக்கிறது. அதை ஒப்புக்கொண்டால் போதும்.

திரு. எஸ். ராகவானந்தம் : பதவியில் இருக்கும்போது நிலம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். பதவி போனபிறகு என் போன்ற நிலம் இல்லாத, வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை, நிலம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாளைக்கே ராஜினாமா செய்தால் தரப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ராகவானந்தம் அவர்கள் ராஜினாமா செய்யப் போகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*Service Stamps*

*16. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU SAW. GANESAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that, in District and Taluk Offices, when cyclostyled copies of different notifications are sent by 'Book Post' to the addressees, 20 paise Service Stamps are affixed instead of 15 paise stamps ;

(*b*) whether the audit department had passed any remarks in this regard ; and

(*c*) whether the Government will take action to prevent this wastage of public money ?

**அஞ்சல் தலை**

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. சா. கணேசன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாவட்ட, வட்ட அரசலுவலகத்திலிருந்து அனுப்படும் பல அறிவிப்புகள் ஒரே மாதிரியாகப் படி எடுக்கப்பட்டு பிறருக்குத் திறவையாக அனுப்பப்பெறும்பொழுது 15 காசு அஞ்சல் தலை ஒட்டுவதற்குப் பதிலாக 20 காசு அஞ்சல் தலை ஒட்டப் பெறுவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இது பற்றித் தணிக்கைத் துறை ஏதாவது கருத்துத் தெரிவித்ததா ?

(உ) இவ்விரயத்தைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?